

சென்னையில் பால்வளம் மற்றும் காதித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் நேற்று முன்தினம் (01.01.2025) கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய துறையின் புதிய இரக பட்டு மற்றும் இதர புதிய பொருட்கள் அறிமுகம் செய்து விற்பனையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் திருமதி வி.அமுதவல்லி, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தன் தலைமைச் செயல் அலுவலர் முனைவர் ப.மகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னையில் நேற்று (02.01.2025), தலைமைச் செயலகத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை, அறிவிப்புகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி சோ. மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், ஆசிரியர் தேர்வுவாரியத் தலைவர் திருமதி பி. ஸ்ரீவெங்கடப்பிரியா, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் திருமதி மா. ஆர்த்தி, பள்ளிக் கல்வித் துறை சிறப்புச் செயலாளர் திருமதி ச. ஜெயந்தி, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர்செயலர் இரா. சுதன், (ப.நி.), தனியார்பள்ளி இயக்குநர் மு. பழனிச்சாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.அ. நரேஷ், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் திருமதி த. உமா, அரசு தேர்வுகள் இயக்ககம் இயக்குநர் திருமதி ந. லதா, பள்ளிக்கல்வித் துறை இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவிற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகை! - இன்று

# மதுரை வடக்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!



மதுரை, ஜன. 3 -

கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 16ஆம் தேதி உலகப் புகழ்பெற்ற தமிழர்களின் வீர விளையாட்டான அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளதால் அது தொடர்பாகவும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் வருகிற மூன்றாம் தேதி மதுரை வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார் அதன் விபரம்

தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு உலக புகழ் பெற்றதாகும். இத்தகைய ஜல்லிக்கட்டு தடை பட்ட போது முதலில் சட்டப் போராட்டம் கண்டு மீட்டுக் கொடுத்தவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் ஆவார். அதேபோல் மீண்டும் தடை கண்ட ஜல்லிக்கட்டை மீட்டெடுக்க பெரும் முயற்சி கொண்டவர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆவார் என்பதை நாடே அறியும்.

இத்தனை பெருமை மிக்க உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு வருகிற 16.01.2025 ஆம் தேதி வியாழக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

அதனையொட்டி முக்கியத்துவம் வாய்ந்த தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விழாவை துவக்கி வைக்க வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுப்பது மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்த மதுரை வடக்கு மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் இன்று (3.1.2025 -வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு மதுரை ஆலத்தூரில் அமைந்துள்ள பி.ஆர். திருமண மஹாலில் நடைபெற உள்ளது.

இந்த சிறப்புமிக்க செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட, மாநில கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்குமாறு வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### திருப்பத்தூர் மாவட்டத்தில் – சட்டமன்றத் தொகுதி வாரியாக

# பாகப் பொறுப்பாளர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி முகாம்!

## மாவட்டச் செயலாளர் க. தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



திருப்பத்தூர், ஜன. 3-

திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய சட்டமன்ற தொகுதி வாரியாக உள்ள பாக இளைஞரணியினருக்கு சமூகவலை பயிற்சி முகாம் கீழ்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.

திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூர் நகரம், திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம், கந்திலி கிழக்கு ஒன்றியம், கந்திலி மத்திய ஒன்றியம், கந்திலி மேற்கு ஒன்றியம் ஆகிய பகுதிகளில் உள்ள பாக இளைஞரணி பொறுப்பாளர்களுக்கு நாளை (4.1.2025 சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் திருப்பத்தூர் டி.என்.டி.அருண் மஹாலிலும்

ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜோலார்பேட்டை நகரம், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம், ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம், கந்திலி தெற்கு ஒன்றியம், திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம்(4 ஊராட்சிகள்), நாட்றம்பள்ளி பேரூர் ஆகிய பகுதிகளில் உள்ள பாக இளைஞரணி பொறுப்பாளர்களுக்கு நாளை (4.1.2025-சனிக்கிழமை) அன்று பிற்பகல் 2.00 மணியளவில் ஜோலார்பேட்டை ராஜராஜேஸ்வரி மஹாலிலும் நடைபெறும்.

வாணியம்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாணியம்பாடி நகரம், ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம், ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் (3 ஊராட்சி), நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம், திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம்(5 ஊராட்சி)

ஆலங்காயம் பேரூர் ஆகிய பகுதிகளில் உள்ள பாக இளைஞரணி பொறுப்பாளர்களுக்கு 5.1.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் வாணியம்பாடி செங்குந்தர் திருமண மண்டபத்திலும்,

ஆம்பூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆம்பூர் நகரம், மாதனூர் கிழக்கு ஒன்றியம், ஆலங்காயம் மேற்கு ஒன்றியம்(8 ஊராட்சி), குடியாத்தம் வடகிழக்கு ஒன்றியம், அணைக்கட்டு தெற்கு ஒன்றியம் ஆகிய பகுதிகளில் உள்ள பாக இளைஞரணி பொறுப்பாளர்களுக்கு 5.1.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 2.00 மணியளவில் ஆம்பூர் கிருஷ்ணாலையா திருமண மண்டபத்தில் நடைபெற்ற உள்ளது.

எனவே அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல் இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி தெரிவித்துள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அலங்காநல்லூர் வருகை!

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் - நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை! மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிக்கை!



மதுரை, ஜன.2-

கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவை துவக்கி வைக்க வருகிற 16ஆம் தேதி அலங்காநல்லூர் வருவது தொடர்பாக மதுரை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஜனவரி 5ம் தேதி காலை 10 மணிக்கு திருமங்கலம் மேலக்கோட்டை

ஜி.கே.எம். பேலஸ் திருமண மஹாலில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்ற நடைபெற உள்ளதாக மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் கழகத்தினருக்கு தமது அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நாடு போற்றும் நம் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான

உலகப்புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவை துவக்கி வைக்க வருகிற 16ஆம் தேதி வருகை தர உள்ளார், அவருக்கு எழுச்சிமிகு வரவேற்பு கொடுப்பது, தைத்திரு நாளை நலத்திட்டங்கள் வழங்கி கொண்டாடுவது உள்ளிட்ட கழக ஆக்கப் பணிகளில் கழகத்தினர் ஈடுபடுவது குறித்தும் மதுரை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திருமங்கலம் நான்கு வழிச் சாலை, மேலக்கோட்டை விளக்கில் அமைந்துள்ள ஜி.கே.எம்.பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

எனவே சிறப்புமிக்க இக் கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட கழகத்தைச் சேர்ந்த மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் நிர்வாகிகள், வட்ட வார்டு கிளைக் கழக செயலாளர்கள் பிரதிநிதிகள்

நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளிர் அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புக்களின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், பாக முகவர் BLA2, பாக முகவர்கள் BLC, கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் தவறாது வருகை தந்து கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன்

தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.




சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் நடைபெற்ற கிழக்கு ஒன்றிய பாக முகவர்கள் கூட்டத்தில் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் துரை ராஜாமணி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### காவிரி உபரி நீர் திட்டத்தில் – மீதமுள்ள 25 ஏரிகளுக்கு

# ரூ.105.35 கோடியில் திட்ட மதிப்பீடு சமர்ப்பிப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!



சேலம், ஜன. 3-

காவிரி உபரிநீர் திட்டத்தில் மீதமுள்ள 25 ஏரிகளுக்கும் நீர் நிரப்பும் வகையில் ரூ.105.35 கோடிக்கு திட்ட மதிப்பீடு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் காவிரி உபரிநீர் திட்டத்தில் சுமார் 70 முதல் 80 சதவிகித ஏரிகளுக்கு நீர்நிரப்பப்பட்டுள்ளது என்றும்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்கும் செயல்பாட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்து தெரிவித்தார்.

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவினை எட்டியுள்ள நிலையில், காவிரி உபரிநீரை ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நிரப்பும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்கும் செயல்பாட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (01.01.2025) தொடங்கி வைத்தார்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்று இந்தாண்டு மட்டும் மேட்டூர் அணை 3 முறை நிரம்பியுள்ளது. சேலம் மாவட்டம், மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவான 120 அடியினை எட்டியுள்ள நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்றையதினம் மேட்டூர் அணையிலிருந்து காவிரி உபரிநீரை நீரேற்று மூலம் ஏரிகளுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்குவது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் வெள்ள நீரை சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர் வழங்கும் திட்டம் ரூ.673.88 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேட்டூர் அணையானது அதன் முழு கொள்ளளவான 120 அடியினை எட்டும் பொழுது அணையின் இடது கரையின் நீர் பரப்பு பகுதியிலிருந்து வெள்ள நீரை திப்பம்பட்டி பிரதான நீரேற்று நிலையம், வெள்ளாளபுரம் துணை நீரேற்று நிலையம், கன்னந்தேரி துணை நீரேற்று நிலையம் மூலமாக 82 ஏரிகள், குளங்களுக்கு நீர் சென்றடையும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சுமார் 70 முதல் 80 சதவிகித ஏரிகளுக்கு நீர் நிரப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் 4,061.16 ஏக்கர் நிலங்கள் பாசனம் மற்றும் குடிநீர் வசதிபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழையின் காரணமாக மேட்டூர் அணை முழுகொள்ளளவை எட்டியதால் கடந்த 31.7.2024 முதல் மூன்று நீரேற்று நிலையங்களிலும் உள்ள 27 மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளுக்கான சோதனை ஓட்டத்தின் மூலம் 40 ஏரிகளுக்கு 267 மில்லியன் கன அடி நீர் நீரேற்றம் செய்யப்பட்டு 2,300 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. இதன்மூலம் விவசாயப் பயன்பாடு மற்றும் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், பெஞ்சல் புயலின் காரணமாக சேலம் மாவட்டம் சேர்வராயன் மலைப்பகுதிகளில் அதிக மழை பெய்து சரபங்கா ஆற்றின் ஏற்பட்ட வெள்ள பெருக்கு காரணமாக கடந்த 14.12.2024 முதல் 19.12.2024 வரை வெள்ளாளபுரம் துணை நீரேற்று நிலையம் மற்றும் கன்னந்தேரி துணை நீரேற்று நிலையம் இயக்கப்பட்டது. இதன் மூலம் 15 ஏரிகள் முழுகொள்ளளவை எட்டியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி, பாரபட்சம் இல்லாமல் அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களில் நகைக்கடன் பெற்ற 1,43,000 பயனாளிகளுக்கு ரூ.481 கோடியும், 5,200 மகளிர் சுய உதவி குழுக்களை சேர்ந்த 55,000 மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.132 கோடி மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் சுமார் 20 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டு பயன் பெற்று வருகின்றனர். மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் 19 கோடி பயணங்களும், மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 24,000 மாணவிகளும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 16,000 மாணவர்களும், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 82,837 மாணவ, மாணவிகளுக்கு திறன் பயிற்சிகளும் வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

தற்பொழுது, மேட்டூர் அணை முழுகொள்ளளவை எட்டியதால் திப்பம்பட்டி பிரதான நீரேற்று நிலையத்திலிருந்து வாத்திப்பட்டி ஏரி, செலவடை ஏரி ஆகிய 2 ஏரிகளுக்கும் நீர்குறைந்துள்ள மற்ற ஏரிகளுக்கும் 100 சதவிகிதம் நீர்நிரப்பும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள, 25 ஏரிகளுக்கு இணைப்புக் கால்வாய் அமைத்திட ரூ.105.35 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், லெனின் நகர் பகுதி பொதுமக்கள் சாலை வசதி வேண்டி தெரிவித்திருந்தனர். இச்சாலை பணிகள் விரைவில் அமைத்துத் தரப்படும் என்ற தகவலை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, காவிரி உபரிநீரை ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நிரப்பும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம் சூரப்பள்ளி கிராமம், வாத்திப்பட்டி எரிக்கு நீர் வந்தடைந்ததை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மலர்தூவி வரவேற்றார்கள்.

இந்நிகழ்வுகளின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மேட்டூர் சார் ஆட்சியர் திருமதி நே.பொன்மணி, நீர்வளத் துறை சரபங்கா வடிநிலக் கோட்ட மேற்பார்வை பொறியாளர் சிவக்குமார், சரபங்கா வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் அப்புசாமி, மேட்டூர் செயற்பொறியாளர் வெங்கடாசலம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் ராஜேஷ் மற்றும் அர்த்தநாரீஸ்வரன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் உடனிருந்தனர்.

# மானாமதுரையில் கிழக்கு ஒன்றியக் கழகப் பாகமுகவர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் துரை.ராஜாமணி தலைமை!

சிவகங்கை, ஜன. 3-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கிழக்கு ஒன்றிய பாகமுகவர்கள் கூட்டம் மானாமதுரையில் தனியார் திருமண மண்டபத்தில் பி.எல்.சி. பாகமுகவர்கள் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆலோசனையின் பேரில் நடைபெற்றது.

கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர் சோனை முத்து தலைமையில் ஒன்றிய துணை தலைவர் முத்துச்சாமி ஒன்றிய கவுன்சிலர் மலைச்சாமி முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் துரை. ராஜாமணி பி.எல்.சி., பாக முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் பணி குறித்து சிறப்புரை யாற்றினார்.

இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் என்.மணி, காளியப்பன் வி.சமய முத்து, ஆர்.கே. நாகராஜ், ராதா சிவச்சந்திரன், சுந்தர வல்லி, வேல்முருகன், பஞ்சவர்ணம் ஊராட்சி மன்ற தலைவர் வளர்மதி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி 18வது வார்டு ரயில்வே நிலையம் அருகில் உள்ள அம்மன் கோவிலில் ஆங்கிலப் புத்தாண்டினை முன்னிட்டு 18வது வார்டு உறுப்பினரும் மாநகராட்சி துணை மேயரும், காரைக்குடி மாநகர செயலாளருமான என்.குணசேகரன் தலைமையில் திருமதி தமிழ்மணி குணசேகரன் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் வார்டு செயலாளர் கணேசன், நிர்வாகிகள் ஐயப்பன், ஓட்டுனர் ரமேஷ் வார்டு நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.